**இலங்கை சட்ட உதவி ஆணையம் - 2019**

---

## 1.1 மறுக்கப்பட்ட அபிப்பிராயம்

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும்இலங்கை சனநாய சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் குறிப்பிடப்பட்டிருந்த முக்கிய விடயங்கள் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழுவின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையத்தின் உரிமைகள் மீதியின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் சென்ற வருடத்திற்கான மிகுதி ரூபா 31,383,715 ஆகவும் அதற்கு ஒவ்வாக நடப்பாண்டு திசெம்பர் 31 ஆந் திகதிக்கு மிகுதி | பெற்றுத் தந்த ஆலோசனையின் படி முன்னே திருத்தப்படும். | பேரேட்டுக் கணக்குகளில் காணப்படும் இறுதி மிகுதிகள் நிதிக் கூற்றுக்களில் குறிக்கப்பட வேண்டியதுடன் அதற்கான சீராக்கல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 9,192,893 ஆகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. அப்படியாயினும் சென்ற ஆண்டின் ஆரம்ப மிகுதிக்கு நடப்பாண்டில் செய்யப்பட்டிருந்த ரூபா 36,108,501 க்கான சீராக்கல் பற்றிய விபரங்கள் கொண்ட ஜர்னல் வவுச்சர்கள் கணக்காய்வுக்கு முன் வைக்கப்படாததுடன் அச்சீராக்கல் சம்பந்தமான விபரங்கள் இணக்கக் கூற்றொன்றின் மூலமாவது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | செய்யப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட விபரங்கள் அடங்கிய இணக்கக் கூற்றொன்றின் மூலமாவது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியமை. |
| (ஆ) | நடப்பாண்டு இறுதியில் சமப்படுத்தப்படாத ஆயினும் 2020 ஆண்டில் சமப்படுத்தப்பட்ட மொத்தம் ரூபா 102,100 ஆன 04 முற்பண மிகுதிகள் நடப்பாண்டில் முற்பண சமப்படுத்தலாக காட்டப்பட்டிருப்பதன் காரணமாக அந்த பெற வேண்டிய முற்பண மிகுதியினை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இதன் பிறகு வருட இறுதியில் சமப்படுத்தப்படாத மிகுதிகள் முற்பணக் கணக்கில் காட்டப்படும். | சமப்படுத்தப்படாத மிகுதிகள் முற்பணக் கணக்கில் சமப்படுத்தப்படாத முற்பணமாக காட்டப்பட வேண்டியமை. |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | உரிமை மூலதனம் | 33,747,436 | பேரேட்டுக் கணக்கு | எதிர்காலத்தில் பேரேட்டுக் கணக்கின் படி ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும். | ஆணைக்குழுவின் சகல கொடுக்கல் வாங்கல்களும் பேரேடு உட்பட ஆரம்ப ஏடுகளில் குறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | தேக்க வைக்கப்பட்ட உழைப்பு | 36,998,200 | பேரேட்டுக் கணக்கு | எதிர்காலத்தில் பேரேட்டுக் கணக்கின் படி ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும். | ஆணைக்குழுவின் சகல கொடுக்கல் வாங்கல்களும் பேரேடு உட்பட ஆரம்ப ஏடுகளில் குறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிரந்தர வைப்பு | 5,398,776 | நிரந்தர வைப்பு பதிவேடு | நிரந்தர வைப்புக்களின் Certificate எங்களிடம் உள்ளது. எதிர்காலத்தில் நீங்கள் காட்டியது போன்று பதிவேடு ஒன்று நடாத்தப்படும். | நிரந்தர வைப்புக்களின் விபரங்கள், வருடாந்த வட்டி, இறுதிக்கப்பட்ட தினத்திற்கு வைப்பின் பெறுமதியினை உள்ளடக்கப்பட்ட நிரந்தர வைப்பு பதிவேடு ஒன்றை நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

**1.6 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ முடிவுகள் ஆகியவற்றுடன் இணங்காமை**

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றின் கவனத்திற்கு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2) | 09 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 173,569 க்கான முற்பணத்தினை சமப்படுத்துவதை 07 நாள் முதல் 53 நாள் வரையிலான காலவீச்சில் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் களுக்கு இது பற்றிய நடைமுறை பிரச்சினை உருவாகியிருப்பதாக தலைவரிடம் தெரிவித்திருப்பதுடன் இதன் பிறகு தாமதங்கள் ஏற்படுத்தாது இருக்கும் படி அவர் எச்சரிக்கை செய்துள்ளார். | நிதிப் பிரமாணத்தின் படி முற்பணம் பெற்றுக் கொடுக்கப்பட்ட அலுவல் முடிந்ததும் சமப்படுத்தல் செய்ய வேண்டியமை |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது வியாபார சுற்று நிருபத்தின் 9.12 பிரிவு | சுற்று நிருப ஏற்பாடுகளுக்கு புறம்பாக ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான 2015 ஆம் வருடம் தனிப்பட்ட காப்புறுதி முறைமையொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக 56 ஊழியர்களுக்காக காப்புறுதிப் பங்களிப்பு நூற்றுக்கு 50 வீதம் அதாவது ரூபா 1,266,811 | விலைமனுக்கோரல் சிலது எடுக்கப்பட்டு அதில் இலாபகரமான கம்பனியினை ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மொத்த பணத்தில் 50 வீதம் நிலையத்தினால் ஏற்கப்படும். | இப்படியான திட்டங்களை செயல் படுத்துகையில் 2003 யூன் 02 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது வியாபார சுற்று நிருபத்தின் 9.12 பிரிவின் பிரகாரம் செயல்பட வேண்டியமை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தனிப்பட்ட காப்புறுதி நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிர்வாக சுற்று நிருபம் | ஆணைக்குழுவிற்கு சொந்தமான 05 வாகனங்கள் சம்பந்தமாக சுற்று நிருபத்தின் படி எரிபொருள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை சுற்று நிருபத்தின் படி எதிர்காலத்தில் செய்யப்படும். | சுற்று நிருபத்தின் படி செய்யப்பட வேண்டியமை. |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவினால் இலங்கை வங்கி புதுக்கடை கிளையில் நடாத்தி கொண்டு போகின்ற வங்கி நடைமுறைக் கணக்கின் 2019 சனவரி முதல் திசெம்பர் வரையிலான 12 மாதங்களில் இருந்த மிகுதியின் சராசரி ரூபா 19,067,226 ஆகும். இக்காலகட்டம் முழுதும் ரூபா 11 மில்லியனுக்கும் 24 மில்லியனுக்கும் இடையிலான பணத்தொகை வினைத்திறனுடன் பாவனை செய்யாது இருந்ததுடன் இப்பணத்தினை பயனுள்ள வகையில் முதலீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பணம் முன்னைய வருடங்களில் மிகுதியாய் இருந்தவையாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எமக்கு அமைச்சிடமிருந்து உரிய நேரத்தில் பணம் கிடைக்காமையினால் இப்பணம், பாவனை செய்யப்படுகின்றது. ஆகையினால் இப்பணத்தினை எமக்கு முதலீடு செய்வது கஷ்டமாகும். | 1971 இலக்கம் 38 கொண்ட நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் படி நிதி அமைச்சரின் அனுமதியுடன் அழைப்பு வைப்பு (Call deposit) களிலாவது முதலீடு செய்வதற்கான கவனம் செலுத்துதல் |

# 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் நடவடிக்கை பெறுபேறு ரூபா 35,418,539 க்கான பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கமைவாக சென்ற வருட பற்றாக்குறை ரூபா 13,838,669 ஆகும். அதன்படி நிதிப்பெறுபேற்றில் ரூபா 21,579,870 க்கான பின்னடைவு அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இலக்கம் 27 கொண்ட சட்ட உதவி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 4(ஓ) பந்தியில் குறிப்பிட்ட சட்ட உதவி வழங்குவதிலான ஏதாவதொரு பிரிவு சம்பந்தமான ஆராய்ச்சி ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களை, சட்டப் பிரச்சினைக்கான மத்திய நிலையங்கள், மற்றும் திட்டங்களை அமைத்தல், நிர்வகித்தல் அபிவிருத்தி செய்தல் அத்துடன் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் அக்காரியத்திற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடுகள் உண்டுபண்ணல் அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக தேவைப்படும் பணிக்குழாமினை சேவையில் ஈடுபடுத்தல் ஆகிய அதிகாரங்களை செயல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் வருடம் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கையினை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | அரச சட்ட உதவி செயல் திட்டத்தினை சிவில் சமூகத்தினுள் மிகவும் முறையான வலுவூட்டலை ஏற்படுத்தும் நோக்கில் 2016 மார்ச் 30 ஆந் திகதி இலங்கைக்கான உத்தேச சட்ட உதவி கொள்கை எனும் பெயரில் தேசிய கொள்கையினை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட போதும், அது செயல்படுத்தப்படவில்லை. | இது சம்பந்தமாக நீதி அமைச்சினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஆலோசனை இதுவரை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். | தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு சட்ட உதவி கொள்கையினை அமுல்படுத்த வேண்டியமை. |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையத்தின் அனைத்து பணிக்குழாமின் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 360 ஆக இருந்த போதும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உண்மையான பணிக்குழாம் 285 ஆக இருந்தமையினால் அனைத்து பணிக்குழாமின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 75 ஆக இருந்தது. இதில் 16 பதவிகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான பதவிகள் ஆகும். | வெற்றிடங்கள், புது மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு அமுல் செய்யப்படும். | சேவைக்கான தேவைகளின் படி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சட்ட உதவி ஆணைக்குழு அலுவல்கள் அமைந்துள்ள பெரும்பாலான சட்ட அதிகார பிரதேசங்களில் ஒரு நீதிமன்றத்திற்கு மேலாக எண்ணிக்கை செயல்படுகின்றது. 60 சட்ட உதவி மத்திய நிலையங்களினுள் 40 மத்திய நிலையங்களிலும் தலா ஒரு சட்ட உத்தியோகத்தர் மாத்திரம் சேவையில் ஈடுபடுதல் மற்றும் அவர்கள் சில சமயங்களில் வேறு சட்ட அதிகார பிரதேசங்களுக்கு செல்வதற்கு நேர்ந்தமையினால் அலுவலக கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக மேற்கொண்டும் சட்ட உத்தியோகத்தர்களின் சேவைக்கான தேவைப்பாடு இருந்தது. | எங்களுக்கு கிடைக்கின்ற ஒதுக்கீட்டின் படி ஒவ்வொரு மத்திய நிலையங்களுக்கும் சட்ட உத்தியோகத்தர் கூடிய எண்ணிக்கை அமர்த்துவது முடியாத காரியம். வழக்கு களுக்கேற்றபடி உத்தியோகத்தர்கள் எண்ணிக்கையினை கூட்டிக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படும். | அலுவலக நிர்வாக செயற்பாடுகளுக்கும் முட்டுக்கட்டை ஏற்படாத வண்ணம் உத்தியோகத்தர் களை சேர்த்துக் கொள்வதற்கு திட்டமிடப்படுதல் வேண்டும். |